பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28-09-2001) தொலைபேசி 3378 ஒலி 291

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் அஞ்சலி

## கேணல் சங்கரின் வித்துடல்

## நேற்று மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைப்பு

(வவுனியா விசேட நிருபர்)

கிளைமோர்த் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கரின் வித்துடல் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை விதைக்கப்பட்டது.

தலைவர் பிரபாகரனின் மலர் வணக்கத்துடன் ஆரம்பமான சங்கரின் இறுதி நிகழ்வில் விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர் இதன் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

சங்கரின் பூதவுடல் மக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சங்கர் மீதான தாக்குதல்

## இராணுவத்திற்கு தொடர்பில்லை

### சனத்கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர் கேணல் சங்கர் நேற்றுமுன் தினம்காலைஒட்டுசுட்டானில் கிளைமோர்தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தமைக்கும் இராணுவத்தினருக்கும் எதுவித தொடர்பில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒட்டுசுட்டனில் இருந்து 15கிலோ மீற்றர்களுக்கப்பாலுள்ள மணலாற்றுப் பகுதியிலேயே இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். எனவே இத்தாக்குலை இராணுவத்தினர் எவ்வாறு மேற கொள்ள முடியு

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் போக்கால் புலிகள் சீற்றம்

# யாழ். குடாவில் எந்நேரமும்

# பாரிய யுத்தம் வெடிக்கலாம்!

## இருதரப்பும் திரைமறைவில் ஆயத்தம்

(நமது நிருபர்)

யாழ்குடாநாட்டை கைப்பற்றி மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான பாரிய யுத்தமொன்றை இராணுவத்திற்கெதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்ள விருப்பதாக யுத்த ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினர் மீது யுத்தம் ஒன்றை புலிகள் மேற்கொள்ளும் பட்சத்தில் அதனை முறியடிக்கக் கூடிய ஆற்றல் படையினரிடம இருப்பதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதிஉச்ச பாதுகாப்பு வலயமான பருத்தித்துறைக் கடற் பிரதேசத்தில் இராணுவ வத்தினரைஏற்றிக் கொண்டு வந்த 'த பிறைற் ஒவ் சவுத்' கப்பல் மீதான தாக்குதலானது, வடபுலத்தில் இராணுவ யுத்ததளபாடங்களைவிநியோகிப்பதில் தடையை ஏற்படுத்தும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கம் தன்னை ஒரு இக்கட்டானநிலையில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய சமாதான ப் பேச்சுவார்த்தைக் கதவை பூட்டி மக்கள் விடுதலை முன்னணியுடன் [ஜே; வி. பி] செய்து கொண்ட புரிந்துணர்வு உடன் படிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான போர் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகிறது;

இதற்கு ஆதரவாக சிங்கள பேரினவாத சக்திகளை ''அரசியல் அமைப்புசீர்திருத்தம்'' என்ற போர்வையில் அரசு

## நம்பிக்கையில்லா பிரேரணை

## இலங்கையர் விபரம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சுயஸ் கால்வாய்ப்பகுதியில் தீ விபத்திற்குள்ளான கப்பலில் பயணம்செய்த 80 இலங்கையர்கள் தொடர்பான விபரங்களை இலங்கை வெளிநாட்டமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எகிப்திலுள்ள இலங்கைத் தூதுவர் டி.சேரசிங்க தெரிவித்துள்ளார்.

இக்கப்பலில் 80 இலங்கையர்கள் பயணம செய்ததாக எகிப்திய கடற்படையினர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 5ம்தர புலமைப் பரீட்சை

## யாழ். வெட்டுப்புள்ளி 118

[கொழும்பு]

2001ஆம் ஆண்டு இடம்பெற்ற 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகளின் வெட்டுப் புள்ளி விபரம் நேற்று பரீட்சைத் திணைக்களத்தினால்வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, கண்டி, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, மட்டக்களப்பு, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தமிழ் மொழி மூலம் தோற்றிய மாணவர்களின் வெட்டுப் புள்ளி 123;

ஏனைய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி விபரம் வருமாறு;

★ வவுனியா.அம்பாறை 121
★ கிளிநொச்சி, முல்லைத்தீவு 120
★ யாழ்ப்பாணம் 118
★ மன்னார், திருகோணமலை 117
★ அனுராதபுரம் 114
★ பொலநறுவ 113
★ பதுளை 111
★ நுவரெலியா 109
★ மொனறாகல 93
★ அம்பந்தோட்டை 90

[08ஆம் பக்கம் பார்க்க]

## க. பொ. த.(சா த) பரீட்சை

இதற்கு ஆதரவாக ...
யுத்ததளபாடங்களைவிநியோ
கிப்பதில் தடையை ஏற்படுத்

பேச்சுவார்த்தைக் கதவை
பூட்டி மக்கள் விடுதலை முன்

பேரினவாத சக்திகளை ''அர சியல் அமைப்புசீர்திருத்தம்'' என்ற போர்வையில் அரசு தன் பக்கம் இழுத்து யுத்தத் திற்கான ஆதரவை பெறும் நடவடிக்கைகளிலும் இறங்கி யுள்ளது.

இதேநேரம் கிளைமோர்த் தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் சங்கர் பலியான சம் பவம் தமிழீழ விடுதலைப் புலி களை மேலும் சினமடைய வைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் சீற் றம்; யாழ் குடாவை கைப் பற்றும் வரை ''ஓயப் போவ தில்லை'' என்ற புலிகளின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லா பிரேரணை ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் உயர்பீடம் இன்று ஆராயும்

(கொழும்பு)

பொதுஜனஐக்கியமுன்னணி அரசு மீது ஐக்கியதேசியக் கட்சி கொண்டுவரவுள்ள நம் பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதா? எதிர்த்து வாக்களிப்பதா என்று தீர்மானிப்பதற்கு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர்பீடம் இன்று கூடவுள்ளது:

முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் தலைமை யில் கூடவுள்ள கட்சி உயர் பீடம் இது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி முன் னர் சமர்ப்பித்திருந்த நம்பிக் கையில்லாத் தீர்மானத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவை தெரிவித்திருந்தமை குறிப்பி டத்தக்கது. (வ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றே சமர்ப்பிக்கப்பட உள்ளது!

## ஆதரவுதர சிஹலஉறுமய நிபந்தனை

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன் னணி அரசுமீது ஐக்கியதேசி யக்கட்சி கொண்டுவர உத் தேசித்துள்ள நம்பிக்கையில் லாப் பிரேரணையை பாரா ளுமன்றசெயலாளர் நாயகத் திடம் இன்றுசமர்ப்பிக்கப்பட வுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர்லொக்கு பண்டா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக்கட்சி கொடுவரவுள்ள இந்தநம்பிக் கை இல்லாத்தீர்மானத்திற்கு ஒப்பமிடுவதற்கு சிஹலஉறு மயக்கட்சித்தலைவர் சில நிபந்தனைகளை விதித்துள்ள தாகவும் தெரிவிக்கப் படு கிறது.

நம்பிக்கைஇல்லாப் பிரேர ணைமூலம் அரசாங்கத்தைக் கவிழ்த்து ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிஅமைக்கும்போது அரசாங்கத்திற்குஆதரவுவழங் கும் எந்தெந்த தமிழ்க்கட்சி களுக்கு அமைச்சர்பதவிகள் வழங்கப்படுமென்று அறிவித் தால் மாத்திரமே சிஹல உறுமய நம்பிக்கையில்லாப்

(08ம் பக்கம் பார்க்க

## க. பொ. த.(சாத) பரீட்சை முடிவுகளின் குறியீடு மாற்றம்

### பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறு களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்கள் மாற்றப்பட்டுள் ளதாக பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் ஆர்.பி அமரக் கோன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மகாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இதுவரைகாலமும் டி.சி. எஸ்.எவ் எனக் குறிப்பிடப் படும் பரீட்சைப் பெறுபேறு கள் இவ்வருடம் முதல் ஏ.பி சி.எஸ்.டபிள்யூ என குறிப் பிடப்படும்.

இதனடிப்படையில் 75 முதல் 100 வரையான புள்ளி களுக்கு 'ஏ' பெறுபேறும், 65 முதல் 74 புள்ளிகளுக்கு 'பி' பெறுபேறும், 50 முதல் 64 புள்ளிகளுக்கு 'சி' பெறு பேறும், 35 முதல் 49 புள்ளிக ளுக்கு 'எஸ்' பெறுபேறும் 34 க்குக் குறைவான புள்ளி களுக்கு 'டபிள்யூ' பெறு பேறும் வழங்கப்படும்.

குழுஒன்று குழுஇரண்டுஎன்ற அடிப்படையில் இரு பிரிவாக பரீட்சார்த்திகள் பரீட்சை

(08ஆம் பக்ம் பார்க்க)

## கல்முனை தபாலதிபர் கைது ஊழியர் வேலை நிறுத்தம்

கல்முனை பொலிஸ் நிலை யத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தபால் குண்டு வெடிப்பு தொடர்பாகதபால் அதிபர் ஒருவரும் சிற்றூழி யர் ஒருவரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசா ரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு வரையும் விடுதலை செய்யக் கோரி கல்முனை தபால் நிலைய ஊழியர்கள் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டுள்ளனர். (ந-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சம்பள அதிகரிப்பு இல்லையேல் வேலை நிறுத்தத்தில் குதிப்போம்

## சுகாதார ஊழியர் அமைச்சருக்கு அழுத்தம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்துறை ஊழியர்கள் தமக்கு முன்னைநாள் சுகாதார அமைச்சர் ஜோன் செனிவரட்ன வழங்கிய உறுதி மொழியின் பிரகாரம் இவ்வாண்டு முடிவிற்குள் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென்று புதிய சுகாதார அமைச்சர் நிமால்ஸ்ரீபால டி. சில்வாவிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

அதற்கு இணங்காவிடில் தாம் உடனடியாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதியைச்சந்தித்து பீ. சீ. பெரேரா சம்பள ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையிலன்றி, கோதாகொட சம்பள ஆணைக்குழுவின் அடிப்படையிலேயே சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமென்று கோரவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

தொழிற்சங்க ஊழியர்கள் தமக்கான படிகளை அதிகரிக்கும் படியும் கேட்டுள்ளனர். சிற்றூழியர்கள் சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகள் அமுல் செய்யப்படக்கூடிய காலம் வரைக்கும் உள்ள இடைக் காலத்திற்கு ரூபா 3000 சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (உ)

## சிறு விளம்பரம்

### கடைகள் விற்பனைக்கு

கதிரேசன் கோவிலடி K.K.S வீதியில் நகைக் கடைக்கு உகந்த (10×30) சதுரடியைக் கொண்ட கடையும் பெரியகடை வீதியில் (மலயான் கபே வீதி) நல்ல வியாபாரம் செய்யக் கூடியதுமான புடைவைக் கடைக்கு உகந்த (14×40) சதுரடியைக் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு. (தொடர்பு கொள்ள T. P யினையும் குறிப்பிடவும்.) விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல: 226 மே/பா வலம்புரி, யாழ்ப்பாணம். (3586)

### தவறிவிட்டது

அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த க. அன்னலட்சுமி என்பவருடைய தே. அ. அட்டை (இல-40334005v) வி. அ. அட்டை (இல - 091014856) என்பன தாவடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. அருளம்பலம் 687/15, மானிப்பாய் வீதி, ஒட்டுமடம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C-2646)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம், எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-106)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்ட மட்டத்தில் இடம் பெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்றைய தினம் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்,

16 வயதுப் பிரிவில்; யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் யா/ பெரியபுலம் வித்தியாலயமும்

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

18 வயதுப் பிரிவில்; யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் எதிர் யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயமும்

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யா/ மூத்துத்தம்பி மகாவித்தியாலயமும் மோதவுள்ளன. (உ-106)

## விவசாயிகள் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் வலிகாமம் பிரதேசங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் இன்னமும் இருந்து வருகின்ற விவசாய நிலங்களை அவர்களிடம் இருந்து மீட்டுத் தரும்படி மேற்படி பிரதேச விவசாயிகள் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக் கோரிக்கை தொடர்பாக இராணுவ உயர் பீடத்துடன் தொடர்பு கொண்ட பின்னரே முடிவைத் தெரியப்படுத்தக் கூடியதாக விருக்கும் என அமைச்சர் விவசாயிகளிடம் தெரிவித்துள்ளார். (உ-77)

## அபிவிருத்தி தொண்டர்களின்கைப்பணி பொருட்கள் விற்பனை

(மந்திகை)

யாழ். மாவட்ட அபிவிருத்தித் தொண்டர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைப்பணிப்பொருட்கள், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தையொட்டி அங்கு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பனைவளத்தொழில்நுட்பம், பழம் பதனிடல் பயிற்சி நெறிகளைப் பயிலும் அபிவிருத்தித் தொண்டர்களின் கைப்பணிப் பொருட்கள் இவ்வாறு விற்பனையாவதை அவதானிக்க முடிகிறது.

இதற்கான ஏற்பாடுகளை பருத்தித்துறைப் பிரதேச சபை உபதலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பரீட்சை ஆரம்பம்

(வல்வெட்டித்துறை)

யாழ். பல்கலைக்கழக தலைப்பீட இறுதியாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (செ- 217)

## இறுதியாட்டமும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் உதவியுடன் தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையமும், நாமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபரும், சமாதான நீதவானுமாகிய இ. வல்லிபுரமும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் சேது விபுலானந்தா, வைத்திய கலாநிதி சுந்தரராஜன் மற்றும்யா/நவாலி அட்டகிரிசைவ வித்தியாசாலைஅதிபர்சி. குணபாலசிங்கம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (வ)

## இராசி பலன்

28/ 9/ 2001

பூரட்டாதி 12வெள்ளி
ஏகாதசி ந.ப 11. 55வரை
திருவோணம்பி.ப12.46வரை
இராகுகாலம் 10.32- 12. 02
சுபநேரம் 6. 02- 7. 32
ஏகாதசி விரதம்

**மேடம்**
கடினஉழைப்பு, உற்சாகம், தூரதேசசெய்தி, முயற்சி கைகூடும்.

**இடபம்**
உடல்உழைப்பு, பிரயாணம் மனச் சஞ்சலம், காரியதாமதம்.

**மிதுனம்**
பிரயாணக் கஷ்டம், உறவினர்வெறுப்புகோபம், முயற்சி தாமதம்.

**கடகம்**
தனவரவு, நண்பர்கள்சந்திப்பு, களியாட்டம், காரிய அனுகூலம்.

**சிங்கம்**
நினைத்த காரியம்கைகூடும் வியாதி குணமடைதல், மன மகிழ்ச்சி, உறவினர்வருகை.

**கன்னி**
மரியாதைக் குறைவு, உஷ்ணவியாதி, தொழில்நன்மை, திடீர்நன்மை.

**துலாம்**
அதிகாரம், போசனசுகம், தந்தை மனஸ்தாபம், பயந்த சுபாவம்.

**விருச்சியம்**
அன்னியர் சந்திப்பு, இனிய சம்பவம், வாக்குப்பலிதம், தனலாபம்.

**தனுசு**
முயற்சிகைகூடும், உறவினர் மனஸ்தாபம், தொழில்விருத்தி, பொருள்விரயம்.

**மகரம்**
நிலை மாற்றம், புதிய பொருள் சேர்க்கை, புதியசிந்தை, காரியம்கைகூடும்.

**கும்பம்**
பிரயாண அலைச்சல், துக்கம், காரியதாமதம், திடீர் நன்மை.

**மீனம்**
பொருள் சேர்க்கை, மதிக்கப்படுதல், காரிய அனுகூலம், தெய்வதரிசனம்.

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது) வளவன்


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள கட்டப்பிராய் பகுதியில் 24.09.2001 அன்று இடம்பெற்ற அமுக்கவெடி சம்பவத்தில் சிக்கி அகால மரணமெய்திய குடும்பத்தினருக்கு எமது சபை சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து, அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி

தலைவர், உபதலைவர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
நீர்வேலி.

(C-2645)

## உடன் தேவை

பழைய புதிய வீடியோ பிரதிகள் எமக்கு தேவை
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**குமரன் கொமினிக்கேசன்**
27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்
T. P. 2765. (கி-2655)



## மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி வாழ்வும் சிந்தனையும் நூல் வெளியீட்டு விழா

இடம்: மகாஜன சபை மண்டபம், அளவெட்டி

காலம்: 30.09.2001ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி

தலைவர்; பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள்

சிறப்புரை நிகழ்த்துவோர்

அருட்கவி சி. விநாசித்தம்பி
புலவர் மு. திருநாவுக்கரசு
திரு. அ. விஸ்வநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்) [3584]

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் உடன்தேவை

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நலன்புரி நிலையங்களின் தேவைக்கென 25000 சோடி தரமான புதிய கிடுகுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. அவற்றை உடனடியாக வழங்கக் கூடியவர்கள் 05-10-2001ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கிடுகுகளை வழங்கலாமென அறியத் தருகின்றேன்.

ரூபா: 11/- ற்கு மேற்படாதவாறு கிடுகுகளின் தரத்திற்கேற்ப கொள்வனவு செய்யப்படும்.

க. கமலசேகரன் (ஜே.பி.யு.எம்)
தலைவர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
2001-09-27 (கி-2654)

# போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆர்வம்
# தமிழ் இளைஞரிடையே அருகிவருகிறது

## இளைஞர் சேவைமன்ற பொறுப்பதிகாரி கார்த்திக்

(யாழ்ப்பாணம்)

கலை கலாசாரப் போட்டிகள் நிகழ்வுகளில் யாழ்: மாவட்ட இளைஞர் யுவதிகளிடம் பங்கு பற்றும் ஆர்வம் குறைந்தே வருகிறது. தமிழர்களின் கலை கலாசாரங்களை கட்டிக்காத்துவளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் இளைஞர் யுவதிகளிடமே உள்ளது.

இளம் சமூகத்தவரிடம் ஒளிந்துள்ள திறன்களை வெளிக்கொணரும் முகமாக தேசிய இளைஞர்சேவை மன்றத்தினரால் வருடாவருடம் மாவட்ட ரீதியாக கலாசாரப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஆயினும் பங்கு பற்றுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது இது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

இவ்வாறு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைமையக கலாசாரப் பகுதி தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரி கே. எஸ். கார்த்திக் கவலை தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தேசிய விருதுக்கான போட்டிக்கு இளம் கலைஞர்களைத்தெரிவு செய்வதறகாகயாழ்மாவட்டத்தில் நடத்தப்பட்டமாவட்டமட்ட கலாசாரப் போட்டிகளில் பங்கு பற்றிய இளம்கலைஞர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துஅவர்தமதுஉரையில் ;பங்குபற்றும் போட்டியாளர்களின் எண்ணிக்கை குறைவதனால் போட்டியற்ற நிலையிலே மாவட்ட ரீதியில் கலைஞர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இதனால் சிறந்த கலைஞர்கள் தேசிய விருது பெறும் போட்டிக்கு உள்வாங்கப்படுவது குறைகிறது.

தமிழ் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் குறைந்த அளவிலேயே தலைமை அலுவலகத்துக்கு கிடைக்கின்றன. ஏனைய மொழி பேசும் இளைஞர்களிடம் உள்ள ஆர்வமும், திறமையும் தமிழ்இளைஞர்களிடையே குறைந்து கொண்டே செல்கிறது.

ஒவ்வொரு இளைஞனும் தனது உச்ச சாதனையான தேசியவிருதைப் பெறும்வரை தொடர்ந்தும் போட்டிகளில் பங்குபற்ற முடியும்;

போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டுபவர்கள் கலாசார துறைசார் நிறுவனங்களில் தொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட உதவி இயக்குனர் ரி.சிவதெட்சணாமூர்த்தி போட்டிகளின் நோக்கம், அவற்றினால் இளம் சமுதாயம் அடையும் நன்மைகள் பற்றி விளக்கமளித்தார்.

கடந்தசனி, ஞாயிறு ஆகிய இருதினங்களும் யாழ். கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயத்தில் மேற்படி போட்டிகள் நடத்தப்பட்டன.

(வ)

## பொன்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை ஊழியர் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கப் பொன் விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும், மலர் வெளியீட்டு விழாவும் நல்லூரில் அமைந்துள்ள சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க வளவில் இன்று பி. ப. 2. 15 மணிக்கு க. இராஜேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர முதல்வர் என். ரவிராஜ் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்

இறைவணக்க அருளாசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் ஆசியுரையை புதிய மரியன்னை தேவாலயப் பங்குத் தந்தை வண அ. சொ. கிறிஸ்ரோப்பரும் நிகழ்த்துவர்.

(உ)

## பெற்றோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்: புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய பெற்றோர் தினவிழா, நாளை சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி கே. பி. எஸ். வரதராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ. இரவீந்திரனும், கௌரவ விருந்தினராக யாழ். கிளரிசியன் சபை முதல்வர் அருட்தந்தை றெக்ஸ்கொன்ஸ்ரன்ரைனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ)

## யாழ்.பல்கலையில் மீன் பிடியியல் கற்கை அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் 2001/2002கல்விஆண்டு கான மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறிக்குதெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கானகற்கை நெறி அடுதத மாதம்8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டயாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 50 பேரையும் வரும் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது,

(உ-6,2)

## இளைஞர் வீடு வந்து சேர்ந்தார்

(மானிப்பாய்)

கடந்த 24 ஆம் திகதிமுதல் காணாமல் போய்விட்டதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட முள்ளி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஸ்ரீக்குமார் மூன்று நாட்களின் பின்னர் வீடு திரும்பியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-232)

## தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் மூலம் குடா நாட்டிற்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 282 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அதேசமயம் குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள்அடங்கிய 55பொதிகள்இக்கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ-9,10]

## விழிப்புலனற்றோர்மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சமூக மட்டத்தில், விழிப்புலனற்றோர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது;

இந்த வகையில், விழிப்புலனற்றோர் மட்டத்தில் தன்னம்பிக்கையை ஊட்டுதல், கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், சுய தொழில் வாய்ப்புக்களுக்கு கடன் வசதி வழங்குதல் வெள்ளைப் பிரம்பு பற்றிய பொது விழிப்புணர்வு போன்ற செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

228, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 1998 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இச் சங்கம் முன்னர் கைதடி நவீல்ட் பாடசாலைக் கட்டடத்தில் இயங்கி வந்ததும் கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் இச் சங்கக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்ததும் குறிப்பிடத்தக்கது;

இதேவேளை, தற்போதுபல வசதியீனங்களுககு மத்தியில் இயங்கி வரும தமது சங்கத்திற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைப்பதில்லை என நிர்வாகிகள் கவலை வெளியிட்டனர்.

75 அங்கத்தவர்களுடன் செயற்படும் இச் சங்கத்துடன் இணைய விரும்பும் விழிப்புலனற்றவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்,

(உ-106-19)

## வெளிவாரிப் பரீட்சை முடிவு வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் நுண்கலைமாணிபட்டப் பரீட்சை முடிவுகள் நேற்றைய தினம் வெளியாகின.

இப் பரீட்சையில் நடனத் துறையில் 6 பேரும் சங்கீதத் துறையில் 6 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

(உ-2,6)

## குடா நாட்டில் இஞ்சிச் செய்கைக்கு அமைச்சர் பணிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மஞ்சள், இஞ்சி ஆகியவற்றைப்பயிரிடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைமேற் கொள்ளுமாறு விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதற்கமையநாட்டின்தென் பகுதியில் இருந்து மஞ்சள், இஞ்சித் துண்டங்களை இங்கு கொண்டு வந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும்எனவும் தெரியவந்துள்ளது.

மேற்படிபயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டால் சிறந்த வருமானத்தைப் பெறலாம் எனக் கூறப்படுகிறது.

(உ-77)

## மீன்பிடிக்குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச மீன் பிடிக்குழுக் கூட்டம் இன்று மு. ப 10. 00மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

(உ- 75)

## வீடியோ படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் சுவிஸ் நாட்டில் வதியும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழரான ''ஜீவன்'' இயக்கிய ''எச்சில் போர்வை'' ''நிழல் யுத்தம்'' ஆகிய குறுந் திரைப்படங்களுடன் மேற்கு வங்க இயக்குநர் சத்தியஜித்ரே இயக்கிய ''அபராஜிதோ'' என்ற ஆங்கில உபதலைப்புகளுடனான வங்கமொழித் திரைப்படமும் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம்என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(செ)

## தெரிவு செய்யப்பட்ட160 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 5நாள் பயிற்சி நெறி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம், சங்கானை, கோப்பாய், கரவெட்டி ஆகிய நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் இருக்கும்160முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் ஒன்றினை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் அமுல் செய்யவுள்ளது.

இத்திட்டத்தின்முதல் கட்டமாக மேற்படி நான்குபிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 முன்பள்ளிஆசிரிய பயிற்றுநர்களுக்கான ஐந்து நாள் பயிற்சிநெறி ஒக்ரோபர் 10 ஆம்திகதிமுதல் 15 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறியின் வள ஆலோசகர்கள் திருகோணமலையில் இருந்து வரவுள்ளதாக இப்பயிற்சியின் இணைப்பாளர் எஸ். பேரின்பநாயகம் தெரிவித்தார்.

இப்பயிற்சியில் பயிற்றுவிக்கப்படும்ஒவ்வொருவரும்தலா 10 முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(உ-77)

## கணக்குமீதி உறுதிப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் 31-05-2001 இற்கான கிராமிய வங்கிகளின் கணக்கு மீதிகள், கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட இருக்கின்றன.

நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் முறையே 28 ஆம் திகதியிலும், வரும் மாதம் 1 ஆம் 2 ஆம் திகதிகளிலும் தமது கையேடுகளைச் சமர்ப்பித்து கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கணக்காய்வாளர் ஆர். ஆனந்தவேல் கேட்டுள்ளார்.

(உ-106)

## பரிசளிப்பும் பெற்றோர் தினவிழாவும்

(மந்திகை)

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பு விழாவும் பெற்றோர் தினவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் ந. தவேந்திரராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு வல்வெட்டித்துறை நகரசபை முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

(செ-23)

## நல்லூர் மாணவர்களுக்கு சத்துணவு பொதிகள் புதனன்று வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தரம் ஒன்று மாணவர்களுக்கான சத்துணவுப் பொதிகள் கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டன.

இக் கோட்டத்தைச்சேர்ந்த 40 பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 160 மாணவர்களுக்கான சத்துணவுப் பொதிகளை ஈழமக்கள் ஜனநாயக் கட்சி உறுப்பினர்கள், பாடசாலைகளுக்கு நேரில் சென்று வழங்கினர்.

(உ-2-6)

### சுகவாழ்வு

தொற்றற்ற துணை ஒருவருடன் மட்டுமே; உங்கள் பாலியல் உறவுகளை வைத்திருங்கள். ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கொள்கை உங்களை எயிட்ஸ் ஸிலிருந்து காக்கும் (எயிட்ஸ்- வருமுன் காப்போம்)

தரிசனம்

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல:76 தொகுப்பு:ரீ. மயூரன்

### நுண்ணறிவு

★ **ஒரு இரகசியக் குறியீட்டில்**

'எதிரி அண்மையில் வந்து கொண்டிருக்கிறான்' என்பதை 'எமைதுரு/ தியிகொக்/ ரின்ண்இ/ உவடிறாண்றகின்' என எழுதப்பட்டிருந்தது.
இவ்இரகசியக் குறியீடுஎழுதப்பட்டமுறையைகவனித்து பின்வரும் செய்திகளை இரகசியக் குறியீட்டிலும்.குறியீட்டுச் செய்திகளை சாதாரண வாக்கியங்களிலும் தருக?

1) எதிரி அண்மையில் வந்து கொண்டிருக்கிறான்

— — — — — — —

2) கோட்டை எதிரிவசப்படுவது உறுதி;

— — — — — — —

3) எமது படைகள் பின் வாங்குகின்றன;

— — — — — — —

4) தறடைச/ ளந்எமா/ பதாமகி/ திஷ்துய/ இபவது/ இபவது

— — — — — — —

5) கோட்டை அகப்பட்டால் மாறு வேடத்தில் தப்பு

— — — — — — —

★ **சுருக்கமான விடை தருக**

சங்கரின் வீடு அவனது நண்பன் அனவரதனின் வீட்டிற்கு தெற்கே 70 மீற்றர் தூரத்தில் உள்ளது.
கோவில் சங்கரின் வீட்டிற்கு மேற்கே 80 மீற்றர் தூரத்தில் உள்ளது. அனவரதனின் மாமா வீடு சங்கரின் வீட்டிற்கு தெற்கே 130 மீற்றர் தூரத்தில் உள்ளது; எனக்கொண்டு 6- ஆம் 7- ஆம் வினாக்களுக்கு விடைதருக;

6) அனவரதனின் வீட்டிற்கும் அவனது மாமனார் வீட்டிற்கும் இடையிலான மிகக் கிட்டிய தூரம் என்ன;
( — — — — )

7) மாமனார் வீட்டிற்கு எத்திசையில் கோவில் அமைந்துள்ளது:
( — — — — )

1200 ரூபாவிற்கு ஒன்றில் 10 Kg தேயிலையையும் 2 Kg கோப்பியையும் அல்லது5 Kg தேயிலையையும்6 Kg கோப்பியையும் வாங்க முடியுமாயின்?

8) 1 Kg தேயிலையின் விலை என்ன?
( — — — — )

9) 1 Kg கோப்பியின் விலை என்ன?
( — — — — )

10) 10 நிமிடங்கள் விரைவாகச் செல்லும் கைக் கடிகாரத்தை அணிந்திருந்த துஸ்யந்தன் கடிகாரம் 7.55ஐக் காட்டிய போது அவர் அலுவலகத்திற்குச் செல்லும் புகையிரதம் புகையிரத நிலையத்தை சென்றடைந்தது அன்றைய தினம் புகையிரதம் 22 நிமிடங்கள் பிந்தி சென்றது. புகையிரதம் சாதாரணமாக புகையிரத நிலையத்தை வந்தடைய வேண்டிய நேரம் யாது?
( — — — — )

★ **எழுத்துக்கள் ஒழுங்கு மாறித் தரப்பட்ட பின்வரும் குழம்பிய சொற்களை கருத்துள்ள சொற்களாக மாற்றி அமைக்குக.**

11) டுபுப்லபத்து :- — — — —
12) பிசாதேனிமா :- — — — —
13) பிராம்பிப்அய :- — — — —
14) தோசநம்ச ;- — — — —
15) வெசம் ஒறுண்வ — — — —

★ **கீழே தரப்பட்ட பெருக்கல் கணக்கில் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்ட இடத்தில் வரவேண்டியஎண்களைக் கண்டறிக.**

```
   F / F
     2 E
  ------
   6 3 C
 D 2 D
 -------
 D 8 B C
```

16) B= — — — —
17) C= — — — —
18) D= — — — —
19) E= — — — —
20) F= — — — —

### பொது அறிவு

★ **வழக்கத்தில் பாவிக்கப்படும் பின்வரும் சுருக்கங்களுக்கான விரிவாக்கத்தைத் தருக?**

21) A; M: — — — — — — — — — —
22) P; M: — — — — — — — — — —
23) D .D; T: — — — — — — — — —
24) O; K;— — — — — — — — — —
25) V. I. P:— — — — — — — — —

★ **26- 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட 4விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்க?**

26) கடந்த வாரம் முதலமைச்சர் ஒருவர் நீதிபதியின் கட்டளையை அடுத்து பதவி விலகிய நாடு எது?
1) பங்களாதேஷ் 2) பாகிஸ்தான் 3) இந்தியா 4) பூட்டான்

27) அடுத்த ஒலிம்பிக் நடைபெறவுள்ள நாடு?
1) சீனா 2) எகிப்து 3) இரேக்கம் 4) இங்கிலாந்து

28) அடுத்த உலகக் கிண்ண துடுப்பாட்டம் நடைபெறவுள்ள நாடு?
1) அவுஸ்திரேலியா 2) இங்கிலாந்து 3) தென் ஆபிரிக்கா 4) நியூசிலாந்து

29) 2001ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஐரோப்பிய நாடொன்றில் பெருமளவு கால்நடைகள் அழிக்கப்பட்டமைக்குக் காரணம்?
1) கால்வாய் தொற்று நோய் பரவியமையால்
2) மாட்டிறைச்சியின் விலை அதிகரிப்பு
3) கால்நடைகளுக்கான தீவனம் அருகிப் போனமை
4) விசர் மாடு(Mad Cow) என்ற தொற்று நோய் ஏற்பட்டமை

30) மக்வேயினால் அமெரிக்காவில் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்ட ஆண்டு?
1) 1998 2) 1995 3) 1997 4) 1999

★ **சுருக்கமான விடை தருக?**

31) உலகிலேயே மிகச் சிறிய நாடு எது?
32) காலையில் மேற்காகவும் மாலையில் கிழக்காகவும் பாயும் அதிசய நதி எது? எங்குள்ளது?
33) யாழ்ப்பாணத்தில் முதன்முதல் புகைப்படக் கலையை அறிமுகப்படுத்தியவர் யார்?
34) மலட்டுத்தன்மை எவ்விற்றமின் பற்றாக்குறையினால் ஏற்படுகின்றது?
35) நீரில் கரையக் கூடிய விற்றமின்கள் எவை?

★ **தொடர்புபடுத்துக.**

| | A | B |
|---|---|---|
| 36) | முதல் விண்வெளி வீரர் | எட்வேட் ஜென்னர் |
| 37) | இஸ்ரேல் பிரதமர் | அன்டேர்ஸ் செல்சியஸ் |
| 38) | அம்மை கட்டுதலை அறிமுகப்படுத்தியவர் | றிகார்டோலாகோஸ் |
| 39) | ''செல்சியஸ்'' அளவுத் திட்டத்தை உருவாக்கியவர் | யூரிகாரின் |
| 40) | சிலி நாட்டு ஜனாதிபதி | ஏரியல்ஷரோன் |

**குறிப்பு:**
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 3.10.2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

**அறிவியல் பகுதி**
**வினா இல :76**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................
சொந்த முகவரி: ..............................
கற்கும் பாடசாலை : ..............................
மாணவர் கையொப்பம் : ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# அறிவியல் வினா இல-75 விடைகள்

01) மனிதன்:ஆடை
02) C:J
03) வட்டம்:பரிதி
04) குடும்பம்:தந்தை
05) பாகற்காய்:கைப்பு
06) மனம்-சனம்
07) பணம்-பிணம்
08) வறுமை-பொறுமை
09) கடல்-உடல்
10) சோகம்-தாகம்
11) கனகாம்பரம்
12) சகோதரன்
13) பிரபஞ்சம்
14) கருதுகோள்
15) கிலோகிராம்
16) A
17) B
18) A
19) B
20) C
21) காதிலுள்ள என்பு
22) 8766 மணித்தியாலங்கள்
23) பென்ரகன்
24) Tim Bernerslee
25) Sir Arthur C-clarke
26) ஆப்கானிஸ்தான்
27) திருகோணமலை
28) தென்ஆபிரிக்கா
29) டோங்கா
30) திமிங்கிலம்
31) Edward T. Smith
32) Vladimir Putin
33) Rcardo lagos
34) John Guten berg
35) Osama Bin laden
36) சர்வதேச எழுத்தறிவு தினம்
37) ஓசோன்படை பாது காப்பு தினம்
38) சர்வதேச சமாதான தினம்
39) உலக கடல்வளதினம்
40) சுற்றுலாதினம்

# சிகை அலங்கரிப்பாளர் சங்க அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவபீட சமுதாய மருத்துவத் துறையினர் கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட சிகைஅலங்கரிப்பாளர் சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் பொதுநூலக கேட்போர் கூடத்தில் சங்க அங்கத்தவர்களுக்கான தொற்றுநோய்கள தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடத்தினர்.

சமுதாய மருத்துவத் துறைத்தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜாவின் நெறிப்படுத்தலில் நான்காம் வருட மருத்துவபீட மாணவர்கள் வழங்கிய இக்கருத்தரங்கு நிகழ்வில்: மக்களிடையே நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் அவற்றைத்தடுக்கும் வழிகள் மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பான விழிப்புணர்ச்சியை சமுதாய மட்டத்தில் ஏற்படுத்தல் தொடர்பாக விளக்கம் கொடுக்கப்பட்டது.

சிகை அலங்கரிப்பாளர்கள் தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு தமது சிகை அலங்கரிப்பு நிலையங்களில் பேணவேண்டிய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டது.

சிகை அலங்கரிப்பு நிலையங்களில் சேரும் கழிவுப்பொருட்களை உரியமுறையில் அகற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென கொக்குவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். சிவபாலன் உறுதியளித்தார்.

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தலைவர் அ. சி. சிவலிங்கம் உரையாற்றுகையில்; தொற்றுநோய்கள் தொடர்பாக கிராம மட்டங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் வாயிலாகவும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு வரும் வாடிக்கையாளரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எமக்கு ஒத்துழைப்புவழங்க வேண்டும் என்றுகேட்டுக் கொண்டார். (உ-106)

# அறிவியல் வினா இல-75

**அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர்விபரம்**

★ சி. கார்த்திகா, நாவலர் வீதி, ஆனைப்பந்தி
★ அ. தீபன், அளவெட்டி
★ ர. கேசவன், கொக்குவில் இந்துக்கல்லூரி
★ பு. கோபிறாஜ், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி
★ வி. பிரியா, தெல்லிப் பழை யூனியன்கல்லூரி
★ சி. சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
★ த. சிந்துஷா, வட்டு. இந்துக்கல்லூரி
★ க. யாழினி, வட்டு. இந்துக்கல்லூரி
★ ச. விஜிதா, வட்டு. இந்துக்கல்லூரி
★ தி. சுமங்கலா, கந்தர் மடம்

## கலந்துரையாடல்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மு. ப 10.00 மணிக்கு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் பங்கேற்க அரச அதிபர், தென்மராட்சிப் பிரதேச செயலர் உட்பட ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-77)

# விவசாயப் பணிப்பாளர் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் பரவலாக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் நிலத்தை உழுது பண்படுத்தி நெற்பயிர்ச் செய்கை மற்றும் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைகளில் கூடிய அளவில்ஈடுபடுமாறுமாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை விவசாயிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-106)

## தைத்த ஆடை கண்காட்சி

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியில், தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் நாளை பருத்தித்துறையிலுள்ள உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

குழுவின் தலைவர் வீ.ஜீ. தங்கவேல் தலைமையில்நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும், தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-77)

## இன்று ஒரு தகவல்

# மானும், சிவபெருமானும்

புள்ளிமான். உடனே உங்களுக்கு அதன் தோல் வேண்டும் என்று தோன்றும். மான் இறக்க வேண்டும் என்றுதான் நீங்கள் எண்ணுகிறீர்கள்! இல்லை என்றால் தோல் கிடைக்குமா? சமயம், சமய உணர்வு, ஆராதனை, ஆகமம், வழிபாடு இவைகள் அனைத்தும் உயிருடன் துள்ளித் திரியும் புள்ளிமான்களின் தோல்கள். இவைகள் அனைத்தும் இப்படி, இப்படித்தான் இருக்க வேண்டும், அமைய வேண்டும் என்று கடவுள் பக்தியுடன் எண்ணுங்கள். கடவுள் பக்தி இல்லாமல் எந்தத் தரப்பைச் சேர்ந்தவர்கள் எப்படி எண்ணினாலும் மான் இறந்துவிடும். பின்புதான் தோல் கிடைக்கும்.

பக்தி இன்றிக் கடவுளை எந்தச் சிறையிலும் அடைக்கக் கூடாது. துள்ளித் திரியும் மானைக் கூண்டில் அடைத்து வளர்த்தாலும் அதற்குச் சுகமேயில்லை. தோலை விரும்பி மானைக் கொன்று தோலை பெருமையுடன் கையில் வைத்துக்கொண்டு திரிவதிலும் லாபமில்லை. பக்தி உள்ளவர்கள் மானை உயிருடன் வளர்க்கலாம். மான் பக்தி இல்லாதவர்கள் அது துள்ளித் திரிவதைப் பார்த்து ரசிக்கலாம். தோல் அதிக விலைக்கு விற்கும் மோகத்தினால் சிலர் அதை வாங்கித் திரிகிறார்கள்.

ஞானியின் பூதக்கண்ணாடி இதைப்பார்த்துப் பேசுகிறது. ''கடவுள்'' பக்தி ஒன்றுதான் வெறி இல்லாதது. விலையில்லாதது மலிவாகக் கிடைப்பது. மற்றச் சமய வெறி, ஜாதி வெறி, மொழி வெறி இவைகள் கடவுள் துறையில் விலை அதிகமுள்ள மான் தோலைப் போன்றது. கடவுளைச் சுட்டுத் தோலை உரிக்கின்ற பாவத்தை ஞானி செய்வதே இல்லை. கடவுள் துறையை அரசியல் துறையாக மனிதன் ஆக்கினானே யானால் அவன் ஏதோ மோஹத்தால், மான் தோலை வைத்துக் கொண்டு திரிகின்ற சிந்தனை இல்லாத மனிதன் என்று தான் கருதத் தோன்றும்.

கடவுள் பக்தியில்லாத எந்த மனிதனின் கையிலும் கடவுள் பிடிபடுவதே இல்லைமானைச் சுடுவதுசட்ட விரோதம். வன விலங்குகளைக் காப்பது அழகு என்கிறது அரசாங்கம் இந்து. சமயம், கிறிஸ்துவ சமயம், இஸ்லாமிய சமயம், சீக்கியம், ஜைனம் என்ற சர்வ சமயம் என்ற காட்டில் துள்ளித் திரியும் புள்ளிமான் என்ற கடவுளையும் வனவிலங்காகச் சேர்த்து விட்டார்கள். மான் வன விலங்கா? ஜாதி, சமயம் ஆகமம், உயர்வு, தாழ்வு என்ற வெறியூட்டும் இவைகளே வன விலங்குகள். அவைகளே கடவுளுக்குச் சிங்கம், புலி, கரடிகள்.

ஞானி பக்தியுடன் கடவுளைப் பிடித்து வளர்க்கிறார். அது வாழ மற்ற விலங்குகளைச் சுட்டுவிட்டார். உலகம் உணர மீண்டும் சுடத்தான் வந்திருக்கிறார். உலக சமுதாயமே, மானைச் சுட்டு, மான் தோலை விரும்பாதே. வேறு எதையுமே விரும்பாதீர்கள். கடவுளை மட்டும் விரும்புங்கள். நீங்கள் விரும்பும் அந்த மான், சிவபெருமான். அவன் கையிலுள்ள மான் சிவனை உயிருடன் பிடியுங்கள் என்று உண்மையைச் சொல்லும் பெருமான் இல்லையா? தோலை விரும்பாமல் மானை விரும்புங்கள் கடவுள் பிடிபடுவான், எது கடவுள்? எது வழிபாடு? எது அர்ச்சனை என்பதை 'பக்தி' சொல்லித்தரும் மானுக்கும் சிவபெருமானுக்கும் பக்தி தான் காப்பு. □

நன்றி
ஞானச்சேரி

## யாழ். குடாநாட்டிலுள்ள

# 238 பாலர் பாடசாலைகள் குடிநீர் வசதி இன்றி இயங்குகின்றனவாம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளில்தற்போதுமொத்தமாக 532 முன்பள்ளிகள் இயங்கிவருவதாக அண்மையில் திரட்டப்பட்ட தகவல்கள் மூலம் தெரியவருகின்றது.

இதன் பிரகாரம் சங்கானையில் 50, வேலணையில் 20, நல்லூரில் 55, கரவெட்டியில் 62, நெடுந்தீவில் 5, கோப்பாயில் 72, ஊர்காவற்றுறை 34, தெல்லிப்பழையில் 29, சண்டிலிப்பாயில் 49, உடுவிலில் 41, தென்மராட்சியில் 7, யாழ்ப்பாணத்தில் 31, மருதங்கேணியில் 5, பருத்தித்துறையில் 72 என்ற ரீதியில் இயங்கிவருகிறன.

இவற்றில் 341 முன்பள்ளிகளில் கற்பித்தல் உபகரணங்கள்இல்லாமல் இருக்கின்றன. 353 முன்பள்ளிகளில் விளையாட்டு உபகரணங்கள் இல்லாமலும், 319 முன்பள்ளிகளுக்கு மல சல கூட வசதிகள் இல்லாமலும், 238 முன்பள்ளிகளுக்கு குடி நீர்வசதிகள் இல்லாத நிலையிலும் இருந்துவருவதாகத் தகவல்கள் மூலம் அறியப்படுகின்றது. (உ-77)

## ஆசிரிய வாண்மை

# விருத்தி கருத்தரங்கு

(நல்லூர்)

தரம் 1 தொடக்கம் 5வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆசிரிய வாண்மை விருத்திப் பயிற்சிக் கருத்தரங்கு, யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இம் மாதம் 28-ஆந் திகதி முதல் ஐந்து தினங்கள் நடத்தப்படவுள்ளது. (உ-103)

# கிணறுகள் துப்பரவு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களின் நலன் கருதி அப்பகுதிக் கிணறுகளை இறைத்து துப்பரவு செய்யும் நடவடிக்கையில், சாவகச்சேரி நகரசபை ஈடுபட்டுவருகின்றது.

இச் சேவையைப் பெற விரும்பும் ஏராளமான பொது மக்கள் தமது விண்ணப்பங்களை சாவகச்சேரி நகர சபைக்கு அனுப்பி வருகின்றனர். (உ-9)

# இளைஞன் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த 19 ஆம் திகதியாழ். பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு அங்கு வைத்துக் கைது செய்யப்பட்ட அனோஜ் வீடியோக் கடை உரிமையாளரான சந்திரசேகரன் சுதர்சன் (வயது 23) என்பவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வேளை விடுதலை செய்யப்பட்டார்.

இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப் படாமையினாலேயே,

யாழ். நீதவான் இ. த. விக்னராஜா உடன் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (உ-10)

## வைத்தீஸ்வராவில்

# வணிக ஒளி நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தின் ''வணிக ஒளிமலர் வெளியீடும் வணிக தினவிழாவும்இன்றுமு.ப10.00மணிக்கு கல்லூரி விவேகானந்தாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் ம. மோகனரூபன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகவியல் துறை விரிவுரையாளர் க. சிவராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை பாடசாலை அதிபர் நா. வன்னிய சிங்கம் நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாண கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராஜகோபால், ஆசிரிய ஆலோசகர் செல்வி நா. வேலுப்பிள்ளை ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை வி.எஸ். கீதபொன் கலன் நிகழ்த்தவுள்ளார். (உ)

# காவலூரிலும் கையெழுத்து வேட்டை

(ஊர்காவற்றுறை)

யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறக்கக் கோரும் கையெழுத்து வேட்டை ஊர்காவற்றுறைப் பகுதியிலும் பரவலாக இடம்பெற்று வருகின்றது. (உ-75)

# புதிய கட்டடம் அமைப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கும் பணி தற்போது இடம் பெற்று வருகின்றது. (உ-103)

# சித்த மருத்துவத்துறை மாணவர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை பல்வேறு நெருக்கடிகள் மத்தியில் கோவில் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

ஐந்து வருட மாணவர்கள் கற்பதற்குப் போதிய இடவசதிகள் இன்றி இக் கட்டடம் காணப்படுவதோடு, இங்கு தளபாட மற்றும் கற்றல் உபகரண ஆய்வு கூட வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதால் கற்பதில் ஆர்வம் குன்றியும், விரக்தி நிலையிலும் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை, கைதடியில் உள்ள சொந்தக்கட்டத்தில் மீளவும் இதனை இயக்கும் முயற்சிகளும் துரித கதியில் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ--106)

## ஏ-9 பாதை திறப்பு

# ஆதரவு வேண்டி கையொப்ப வேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கண்டி ஏ-9 வீதியைத் திறப்பதற்குப் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், கையொப்பங்கள் மற்றும் விபரங்களைத் திரட்டும் பணியில் அபிவிருத்தித் தொண்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் மேற்படி ஆதரவு தேடும் பணி இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-106)

# உதைபந்தாட்டப் போட்டி நாளை மீண்டும் ஆரம்பம்

(ஏழாலை)

தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த தெல்லிப்பழைக் கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் நாளை சனிக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பி.ப2.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள பாடசாலை அணிகளின் விபரம் வருமாறு

★ 16வயது கீழ்ப்பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும்,

★ 18 வயதுகீழ்ப் பிரிவில் கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து மல்லாகம்மகாவித்தியாலயமும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து வசாவிளான் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன.

அணிகளுக்கிடையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக கடந்த இரண்டு நாட்களாக இப்போட்டிகள் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (செ-12)

## கோப்பாய்

# வைத்திய சாலைக்கு தொலைபேசிவசதி இல்லை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு இதுவரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படாமையால் வைத்தியசாலைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல் வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து நீண்டகாலமாக உரிய தரப்புகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமைகுறித்து வைத்தியசாலை வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி வைத்தியசாலைக்கு நாளாந்தம் சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர் தொகை அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

## சிகை அலங்கரிப்பாளர்களுக்கு

# தொற்று நோயை தடுக்க தடுப்பு மருந்தேற்ற முடிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 19 ஆம்திகதி யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் சங்க தலைமை அலுவலகத்தில் சங்கத்தலைவர் அ. சி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குடாநாட்டில் சிகை அலங்கரிப்பாளர்கள் மத்தியில் தொற்று நோய்கள் பரவி வருவதால் அவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்க நடவடிக்கை எடுத்தல்.

வாடிக்கையாளர்களும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு வரும்போது சுத்தம் பேணுவதன் மூலம் ஏனையவர்களுக்கு தொற்றுநோய்கள் ஏற்படுவதை இயன்றவரை குறைத்தல்.

வாடிக்கையாளரும் சிகை அலங்கரிப்பவர்களும் பாதிக்கப்படக் கூடிய விதத்தில் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுவதைத் தவிர்த்தல்.

குடாநாட்டிலுள்ள 47 அரச சார்பற்ற அமைப்புகள் மூலம் மக்களின் அன்றாட தேவைகளை நிறைவு செய்யும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல்.

சிகை அலங்காரிப்பு நிலையங்களில் தேங்கும் கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுத்தல். (உ-106)

## பயங்கரவாதத்திற்கு ஆதரவாகச் செயற்படுவோரை அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்குக

### இந்தியா இன்ரபோலிடம் வலியுறுத்து

(புதுடில்லி)

பயங்கரவாதத்திற்கு ஆதரவாகச் செயற்படுவோரை அவரவர் நாட்டுத் தலைவர்களிடம் ஒப்படைப்பதற்கான புதிய சட்டதிட்டங்களை உருவாக்க சர்வதேச சமூகம் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக புதியசட்டங்களை வகுக்குமாறு உலக நாடுகளை 'இன்ரபோல்' கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இந்திய மத்திய புலனாய்வு நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள இன்ரபோல் பொதுக் கூட்டத்தில், சர்வதேச பொலிஸாரின்பாதுகாப்பு நடவடிக்கைகளில் குறைபாடு இருந்ததால்தான், அமெரிக்காமீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்பதால் இந்தியா இவ்வேண்டுகோளை விடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

(உ-7)

## ஆப்கான் மக்களுக்கு எல்லைகளைத் திறந்து விடவும்

### ஐ. நா. செயலர் கோரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பிச் செல்லும் மக்களுக்கு அயல் நாடுகள் எல்லைகளைத் திறந்துவிட வேண்டும் என ஐ. நா. செயலர் கோபி அனான் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வதேச சட்டப்படி புகலிடம் நாடி வரும் மக்களுக்கு எல்லைகளைத் திறந்து விட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால் சுமரர் 15 லட்சம் ஆப்கானியர் தமது நாட்டிலிருந்து தப்பித்துச் செல்வார்கள் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ)

## தந்தை வழியில் தனயன் பின்லேடனின் மகனும் தீவிரவாதத்தில் ஆர்வம்

(வாஷிங்டன்)

ஒஸாமா பின்லேடனின் மகனும் தந்தை வழியைப் பின்பற்றி தீவிரவாதத்தில் ஆர்வம்காட்டிவருவதாகத்தகவல் வெளியாகி உள்ளது.

இவரது 13 பிள்ளைகளில் ஒருவரான 19 வயதான முகமது பின்லேடனே தந்தை வழியைப் பின்பற்றி தீவிரவாதத்தில் ஆர்வம் காட்டி வருவதாக அமெரிக்க புலனாய்வுத்துறை தகவல் வெளியிட்டுள்ளது.

முகமது பின்லேடன் முன்னர் பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரில் தங்கியிருந்தார் என்றும்,

தற்போது ஆப்கானிஸ்தானில் தந்தை ஒஸாமா பின்லேடனுடன் தங்கி இருக்கின்றார் என்றும் தெரிய வருகிறது.

(உ-2)

## மதங்களுக்கிடையே மோதல் தடுக்க முனைந்த பொலிஸார் மீதும் தாக்கு

(லண்டன்)

வட அயர்லாந்து தலை நகரில் புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கும், கத்தோலிக்கருக்குமிடையே கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

இம் மோதல்களைத் தடுக்கப் பொலிஸார் முனைந்த போது புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் சண்டை மூண்டதாகவும்,

இச்சம்பவத்தில் காயமடைந்து ஆபத்தான நிலையில் பொலிஸ் வீரர்கள் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம்நடந்தஇடத்தில் நிலைமையைக் கட்டுப் பாட்டில் கொண்டு வரும் வகையில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

(து)

## இஸ்ரேல்- பலஸ்தீன யுத்தத்தை நிறுத்தும் சமாதானப் பேச்சு விரைவில்

(ஜெருசலேம்)

பயங்கரவாதத்திற்கு எதிரான திட்டம் ஒன்றை கட்டியெழுப்புமாறு அமெரிக்காகொடுத்துவரும் அழுத்தங்களைத் தொடர்ந்து இஸ்ரேல் வெளியுறவு அமைச்சரும் பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தும் யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தைகளை விரைவில் ஆரம்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே கடந்த ஞாயிறன்று இடம் பெறவிருந்த பேச்சுவார்த்தையை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் ரத்துச் செய்திருந்தமையும். பேச்சு வார்த்தைகளுக்கு 48 மணி நேரத்துக்கு முன் வன்முறைகள் இடம் பெறக்கூடாது என்றும்இஸ்ரேல்பிரதமரின் முன் நிபந்தனையை பலஸ்தீன அதிகாரிகள் ஏற்க மறுத்ததைத்தொடர்ந்து அன்றைய தினம் பேச்சுவார்த்தைகள் ரத்துச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-2)

## பயங்கரவாத அழிப்பில் ஜம்மு காஷ்மீர் அடங்கும்

### அமெரிக்கா அறிவிப்பு

(புதுடில்லி)

அமெரிக்காவின் உலக பயங்கரவாதத்தை அழிக்கும் திட்டத்தில் ஜம்முகாஷ்மீரும் அடங்குமென்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கா ஆப்கானின் தலிபான் ஆட்சிப் பகுதியை பயங்கரவாதப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது. இதேபோன்று அடிக்கடி பயங்கரவாதச் செயல்கள் இடம்பெறும் ஜம்முகாஷ்மீர் பகுதியையும் பயங்கரவாத எதிர்ப்புப் பகுதியாக அறிவித்துள்ளது.

ஜம்முவில் இயங்கும் லக்ஸ்ஸறி இதொய்பா, கமாஸ் போன்ற இயக்கங்களை ,பயங்கரவாத இயக்கங்களாக அமெரிக்கா பிரகடனப்படுத்திய போதும் அவற்றை அமெரிக்காவில் தடைசெய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வந்தது.

அத்துடன் பிரித்தானியாவும் இந்த இயக்கங்களைத் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சூழ்நிலையில் தான் அமெரிக்கா ஜம்முகாஷ்மீரை பயங்கரவாதப் பிரதேசமாக பிரகடனம் செய்துள்ளது.

(து-எ)

## உலக தரிசனம்

## தலிபானை தோல்வியடையச்செய்யும் சக்தி அமெரிக்காவுக்கு கிடையாது

### தலைவர் முல்லா முஹமட் சவால்

(காபூல்)

அமெரிக்கா எவ்வளவுதான் பலம்வாய்ந்த வல்லரசாக இருந்தாலும் தம்மை முறியடிக்க முடியாது என தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா முஹமட் சவால் விடுத்துள்ளார்.

தலிபான் அமைப்பைத் தோல்வியடையச் செய்யும் சக்தி அமெரிக்காவிடம் இல்லை எனவும் பின்லேடனை தேடிப்பிடிக்கும் முயற்சி கைகூடப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கச் செய்தி ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே முல்லா முஹமட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(உ-7)

## சீக்கியர்களை தாக்கியோர் நீதியின் முன் நிறுத்தப்படுவர்

### அமெரிக்க அதிபர் உறுதி

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வாழும் சீக்கியர்கள் மீது வன்முறையை மேற்கொண்ட வகுப்புவாதிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களென்று

அமெரிக்காவில் எல்லா மக்களும் சமமாகக் கணிக்கப்படுவார்கள் என்று மேலும் தெரிவித்தார்.

அதிபர் மாளிகையில் சீக்கிய முஸ்லிம் பிரமுகர்களின்

அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

எல்லா அமெரிக்கர்களும் பொதுவான கருத்துக்களாலும் இலட்சியங்களாலும் பிணைக்கப்பட்டவர்கள் என்

சண்டை மூண்டதாகவும்,

கப்பட்டனர். (து)

நிறுத்தப்படுவார்களென்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நகரங்கள் தாக்கப்பட்டதன் எதிரொலியாக இந்திய - அமெரிக்க சீக்கிய இனத்தவர்கள் தாக்கப்பட்டமை பற்றியும் அவர்களுள் ஒருவர் உயிரிழந்தமை குறித்தும் தான் வேதனைப் படுவதாகக் குறிப்பிட்ட அவர்

கிய முஸ்லிம் பிரமுகர்களின் மத்தியில் பேசுகையிலேயே

லும் இலட்சியங்களாலும் பிணைக்கப்பட்டவர்கள் என்றும் தெரிவித்தார். (து)

## உலக நிலை கருதி

# பெங்களூர் சர்வதேச திரைப்பட விழா ரத்து

[பெங்களூர்]

பெங்களூரில் வரும் மாதம் நடைபெறவிருந்த சர்வதேச திரைப்பட விழா ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இந்தியச் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் தலைமையில் கூடிய இவ் விழா ஏற்பாட்டுக்குழு, விழாவை ரத்துச் செய்யும் முடிவை எடுத்துள்ளது.

அமெரிக்கா மீதான தாக்குதலை தொடர்ந்து உலக மக்கள் பெரும் சோகத்திலும் பரபரப்பிலும் இருக்கும் போது, இவ் விழா அவசியமான ஒன்றல்ல. எனவேதான் இவ் விழாவை ரத்துச் செய்யும் முடிவிற்கு வந்ததாக சுஸ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

(உ-2)

## உள்ளூராட்சித் தேர்தல்

# அ. இ. அ. தி. மு. க. த. மா. க. உடன்பாடு

(சென்னை)

தமிழ் நாடு உள்ளூராட்சித் தேர்தலில் அ. இ. அ தி மு.க வும் த. மா. க. வும் உடன்பாட்டிற்கு வந்துள்ளன.

நேற்று பேச்சு வார்த்தை மூலம் எட்டப்பட்ட இந்த உடன்பாட்டின்படி போட்டி இடுவதற்கு 25 வீத இடங்கள் தமிழ் மாநிலக் காங்கிரஸிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கிடையில் தி. மு. க. விற்கும் பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையேயான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

(து)

# தாக்குதல் திட்டம் அம்பலம்

(வாஷிங்டன்)

அமெரிக்கா மற்றும்கொலம்பியாவில் முக்கிய நிலைகள் மீது தாக்குதல் நடத்தும் திட்டங்கள் குறித்து பதியப்பட்ட ஒலிநாடா ஒன்றினை கொலம்பிய பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்நாடாவில் பதியப்பட்டிருப்பது கொலம்பியாவில் இயங்கும் மாக்ஸிஸ பாக் கிளர்ச்சிவாதத் தளபதியின் குரல் என்றும்,

தனது உப தளபதிகளுக்கு தாக்குதல் திட்டம் குறித்தே இந்நாடாவில் குறிப்பிட்டுள்ளார் எனினும் கொலம்பியப் பாதுகாப்புப் படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

(உ- 4)

# ஆப்கானுக்கு எதிராக பாக். செயற்படாது

## வெளியுறவு அதிகாரி தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

ஆப்கானுக்கு எதிராகப் பாகிஸ்தான் எந்த ஒரு நடவடிக்கையிலும் இறங்கமாட்டாது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் இவ்வாறு தெரிவித்த அந்த அதிகாரி மேலு தெரிவிக்கையில்;

ஆப்கானிஸ்தான் மக்கள் மீதோ, பின்லேடன் மீதோ தாக்குவது தங்கள் நோக்கமில்லையென்றும்;

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதே தமது நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட அமெரிக்க அதிகாரிகளும், ஆப்கான் அதிகாரிகளும் பாகிஸ்தானில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஒருமித்த கருத்து எட்டப்பட்ட போதிலும் பேச்சுவார்த்தைகள் பற்றிய முழு விபரங்களும் வெளியிடப்படவில்லை,

பின்லேடன் ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பிச் சென்றால் பாகிஸ்தான் புகலிடம் கொடுக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(து-2)

# 353 பேர் கைது

(வாஷிங்டன்)

அமெரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத்தாக்குதல் தொடர்பாக 353 பேர் கைது செய்யப்பட்டு தீவிர புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக 19 பேரின் புகைப்படங்களையும், பெயர்களையும் அமெரிக்க புலனாய்வுத் துறையினர் வெளியிட்டுள்ளமை தெரிந்ததே.

(உ-5)

என்னை முன் நில்லன்மின்
தெவ்விர் பலர் என்னை
முன்நின்று கல்நின் றவர்
-குறள்

வலம்புரி

## தொடர்கின்ற மரணங்கள்

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் கிளைமோர்த் தாக்குதலில் மரணமடைந்துள்ளார். இக்கிளைமோர்த் தாக்குதலை இலங்கை இராணுவமே மேற்கொண்டதாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

சங்கரின் மரணம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில், இத்தகைய மரணங்கள் சமாதானத்தை முழுமையாக மறைத்துவிடும் என்பதுடன், இனப்பிரச்சினைக்குச் சுமுகமாகத் தீர்வு காணும் வழிக்கும் தாழ் போட்டுவிடும் என்ற தொனியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு, யுத்தத்தாலன்றிபேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்பது உலகறிந்த உண்மை. ஒரு சிறிய நாட்டுக்குள் நடக்கும் இனப் போர் எத்தனையோ அடபாவி உயிர்களைக் காவு கொண்டுவிட்டது.

மக்கள் தம் வாழ்விடங்களை விட்டு, ஏதிலிகளாக வாழ்வைக் கழிக்கின்றனர்.

இந்நிலையில் பொறுப்பு வாய்ந்த ஓர் அரசாங்கம் இந்த யுத்தத்திற்கு முடிவு கட்டி மக்களின் நிம்மதியான வாழ்விற்கு வழி சமைக்கும் தார்மீகப் பொறுப்பை முன்னெடுக்க வேண்டும். இதனை விடுத்து யுத்தத்திற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடுவது நாட்டை மேலும் அழிவுப்பாதைக்கே இட்டுச்செல்லும்

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் போது அரசோ, புலிகளோ சமாதான முறிப்பில்ஈடுபட முடியாது அதேநேரம் தீர்வின்போது காணப்படும் சிக்கல்களை சுமுகமாகத் தீர்ப்பதற்கும் மத்தியஸ்தம் வகிக்கும் நாடு உதவ முடியும்.

இதற்கு நோர்வே நாடு முன்வந்திருந்தது. ஆனால் அதனை நல்ல முறையில் பயன்படுத்த அரசு தவறிவிட்டது.

இந்நிலையில் தொடர்ந்தும் உயிரிழப்புக்கள் நடைபெறுமாயின் பரஸ்பரம் தற்றச்சாட்டுக்கள் நீண்டு செல்வதுடன் அஃது சமாதானத்தின் கதவுகளை இறுகச்சாத்திவிடும். எனவே எல்லாத்தரப்பினரும் மனிதவாழ்வுக்காக ஓர் சமாதான முயற்சியை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

## வெள்ளி நற் சிந்தனை

# வல்வினைகள் போக்கும் ஸ்ரீ வல்லிபுரநாதன்

# கழல் பற்றினார்க்கு கடுகிவருமிடர் விலகும்

**கந்த.தியாகரராசா ஜே. பி.**
**கோண்டாவில் கிழக்கு**



மண்ணும்பொன்விளைய, சீரும் திறனும், அறிவாற்றல் மிக்கார் செறிந்தும் ஒழுக்கத்தை ஓம்பி, பண்பினைக் காத்துவிழுப்பத்தைக்கொண்டுயர் ஊராம் கோண்டாவில் கிழக்கில் பொலிவுறும் திருக்கோயில்கள் பலவும் சூழ நடு நாயகமாக துளசியணி தூயவன் வரமீயும் வள்ளலாய், பூதேவி ஸ்ரீதேவி சமேதராய் வரதராஜன் வல்லிபுரநாதன் என்னும் திருநாமம் பூண்ட திருத்தலம் அமைந்துள்ளது; தொன்மையான இந்த ஆலயம்,கால மாற்றங்கள் ஏற்படுத்திய புத்தூக்கம் காரணமாக இன்றைய தலைமுறையினரின் அயராத முயற்சியால் முன்னேற்றம் கண்டது.முயற்சிக்குத் தெய்வம் துணையானது;

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்'

என்னும் பொய்யா மொழி இங்கு மெய்யானது வளம் குன்றி வாழ்ந்தமையாலும், கட்டுப்பாடுகளாலும் ஓங்கி வளர முடியாத ஆலயத்தின் மூர்த்தியின் கீர்த்தியும் மேம்படாத காலம் மறைய ஆரம்பித்து; கைப்பொருளீய்ந்து மெய்ப்பொருள் காணக்குடி மக்கள் விழைந்தனர்; நேர்மையும் நெஞ்சுரமும் திறனும் பக்க பலமாக்கி கோயில் காண விரைந்தனர்;

### கோயில் அமைத்தது

'நாடா கொன்றோ-காடா
கொன்றோ
அவலா கொன்றோ-மிசையா
கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய
நிலனே,

என்ற ஔவையின் திருமொழிக்கு ஒப்ப, வல்லிபுரநாதனும் திருவுளம் கொள்ள மேடுதிருத்தி, பள்ளம் நிரப்பி,நிலம் சீர் செய்து திருப்பணி தொடங்கியது; மடாலயமும் கற்கோயிலானது மக்களின் அயராத உழைப்பினால் பரிவார மூர்த்திகளுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டன; மணியொலித்தது, வேதம் ஒலித்தது,மந்திரம் ஒலித்தது, மங்கள கானம் ஒலித்தது, சங்கொலித்தது, மாதவன் கருணை ஒளிர்ந்தது, மக்கள் மனங்களும் குளிர்ந்தன-குடிகளும் சிறந்தன;

'நாடிலும் நின்னடியேநாடுவன் நாடோறும் பாடிலும் நின் புகழே பாடுவன்' என்று பொன்னாழியேந்தினான் திருத்தலத்துக்கு பக்தர்கள் கூடினர்.மூர்த்தியின் கீர்த்தியும் உயர்ந்தது. கோயிலும் வளர்ந்தது; கோவிந்தன் கோயில் கோகரணம் சூழாக் கால்களும்,கண்டு கசிந்துருகாக்கண்களும், தொழாக் கரங்களும்'தாழாத சிரமும். எண்ணாத நெஞ்சும் இருந்தென்ன பயன் என்று நாள் தோறும் எட்டெழுத்தோதி, திருமண்ணணிந்து, வல்லிபுரநாதனை வழிபடும் அடியார் எண்ணிலர்.இறைவன் பாத தூளி சென்னியிற் பட்டாற் போதும் என்றேங்கி 'இணையான் திருவடி என்தலைமேல் வைத்தலுமே அணையான் சுற்றங்கள் அத்தனையும்துறந் தொழிந்தேன்' தொழுது எண்ணியது கைகூடப் பெற்றவர் கணக்கிலர். குரங்கின் கைப்பூமாலையாக குலைந்து திரியும் என்னை ஈடேற்றி விடு என்றழுது 'மணமான வானரக் கைம்மாலை ஆக்காமல் எனையாள் அடிகளடி எய்து நாள் எந்நாளோ' என்றுதாம் பற்றி வரம் பெற்றார் அளவிலர்;

### தேரும் கண்டனர்

வல்லிபுரநாதனின்வற்றாத ஆற்றலின் உந்ததலினால்அடியார்களின் சிந்தையில் வானோர்க்கு மேலான தெய்வத்தை வண்ணத்தேரில் காண அவாவுற்றனர்.வேண்டியவர்களுக்கு வேண்டும் வரமீயும் வேணு கோபாலன், அடியவர்எண்ணத்தைஈடேற்றத் திருவுளங் கொண்டதில் வியப்பில்லை. எழுபதுக்களில் கற்கோயிலை கண்டவர், எண்பதுக்களில் தேர்காண, அளவுக்கு மீறிய சக்தியின்பின்னணியில்திருப்பணிதொடர்ந்தது.அழகிய சித்திரத்தேர் உருவானது.கீதை சொல்லித் தர்மத்தைக் காத்தவனுக்கு புவியாளும் புருஷோத்தமனுக்கு மஹோற்சவம்ஆரம்பமானது.வல்லிபுரநாதனைத் தேரில்கண்ட அடியார்கள் ஆனந்தம் கொண்டனர்; தேவர்கள் மட்டுமல்ல கண்ணுற்ற மண்ணவரும் வியந்தனர்.திருமாலின் திருவருளாட்சியைப் போற்றினர்.

### மஹோற்சவம்

துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யும் ஸ்ரீ வல்லிபுரநாதனுக்குப் புரட்டாதித்திங்கள் அமாவாசையை அடுத்து வரும்நவமிதிதியைதேரோற்சவமாகவும், தசமித்திதியை தீர்த்தோற்சவமாகவும் கொண்டு பத்துதினங்கள் மஹோற்சவம் நடைபெறும்; பதினோராம் திருவிழாவாகத் திருக்கல்யாணத் திருவிழா இடம் பெறுவதும் சிறப்பம்சமாகும்;

தேர்த்திருவிழாவன்று கற்பூரச்சட்டி ஏந்துவாரும், காவடிஎடுப்பாரும் அங்கப் பிரதிஷ்டை செய்வாரும், அடியழித்து நேர்த்திக்கடன் முடிப்பாரும், பரந்தாமன் புகழ்பாடி பஜனை செய்வாரும் குறைவிலர். வல்லிபுரநாதன் தேர் வடம் பிடித்து வானில் இடம் பிடிக்கக் கூடுவாரும் அநேகர்; மங்கள வாத்தியம் முழங்க மாதரர்களும் மகாபுருஷர்களும் புடை சூழ ஸ்ரீதேவி பூதேவியுடன் வல்லிபுரநாதன் தேரில்வரும் திருக்காட்சி அனைவரையும் கவரக்கூடியது. இக்காட்சியை கண்ணுற்றார் கண்கள் குளமாக கரமொட்டி சிரம் தாழ்த்திக் ''கோவிந்தா'' ''கோவிந்தா'' எனக் கூவிக் கும்பிடும் காட்சிமெய்சிலிர்க்க வைக்கும் அருள் நிறைந்த காட்சியாகும். சித்திரத்தேர் பவனிகாண ஊரின் பலபாகங்களிலும் இருந்து மக்கள் பெருமளவில் கூடுவதும் கும்பிடுவதும் மெய்யுருகிப் பாடுவதும், தமை மறந்து ஆடுவதும் பரவசமூட்ட வல்லது. மலங்கள் நீங்கப்பெற்றோம் இனிப்பிறப்பெய்தோம் இடர்படோம் கண்ணன் கழல் துணை யெனக்ளிப்படைவர்

### ஏனைய விழாக்கள்

இவ்வாலயத்தில் மஹோற்சவம் மட்டுமல்ல ஏனைய மற்ற விழாக்களும் வெகு சிறப்பாக நடைபெறும். காலம் தவறாத மூன்றுகாலப் பூஜை வெகுநேர்த்தியாக இடம் பெறுவது சிறப்பானது; பாவை நோன்பு எனப்படும் மார்கழி நீராடல் நோன்பு புலர்ந்தும்புலராதஅந்தஇனிய காலைப் பொழுதில் முப்பது தினங்கள் இடம் பெறுவது மனத்தை ஈர்க்கவல்லது; கிருஷ்ண ஜெயந்தியும் பெருவிழாவாக கொண்டாப்படும் இத்திருக் கோயிலில். மாதங்கள் தோறும்வரும் ஏகாதசி திருநாட்களும், ஜெயந்தி தினங்களும் ஆழ்வார்கள் திருநாட்களும் உற்சவயாகக் கொண்டாடப்படும் விழாக்களாகும். சனிவாரத்தில் நவக்கிரக அபிஷேகங்களும் விசேஷபூசைகளும் சிறப்பாக நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தைப் பொங்கல், புதுவருடப் பிறப்பு, ஆவணி ஞாயிறு, திருக் கார்த்திகை, தீபாவளி போன்ற இந்துக்களின்விசேஷ தினங்களிலும் உற்சவம் நடைபெறுவது சிறப்பம்சமாகும். இத்தகைய பல்சிறப்பும் கொண்டவனை எண்ணும் நினைவும் எதுவும் நினதே கண்ணா எனச் சரண்புகுந்து எட்டெழுத்து மந்திரத்தை எண்ணி வழிபடுவார்க்கு மட்டில்லாமகிழ்ச்சி பொங்கும்; மாடு மனைசேரும், வல்லிபுரநாதன் கழல் தொழுவோம் வல்வினை போக்க அவன் கருணையை பெற்றுய்வோம். □

## தினசரி தியானம்

### இடிக்க முடியாத மாளிகை

போக்குவர வற்றவெளி
போல் நிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி
நினைப்பறுவ தெந்நாளோ?

- தாயுமானவர்

தேவாதிதேவனே, தெய்வப் பெற்றியைப் பெற்ற பின் நான் அதை இழப்பது எங்ஙனம்?

தனது உள்ளத்தில் மனிதன் கட்டும் மாளிகைக்குத் தூய்மை, நல்லறிவு, இரக்கம், அன்பு ஆகிய நான்கும் நான்கு சுவர்கள் ஆகின்றன. அமைதி அதன் கூரை, சிரத்தை அதன் தளம், இறைவழிபாடு அதன் வாயில், அருள் அதனுள் வீசும் காற்று. ஆனந்தம் ஆங்கு நிகழும் இசை;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

## தென்மராட்சியில்

# பெரும்போக செய்கை இம்முறையும் இல்லை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடமும் பெரும்போக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிய வருகின்றது.

இதன் காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 19 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் மேலும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.

வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் இந்த விவசாயக் குடும்பங்கள் எவ்வித வருமானமும் அற்ற நிலையில் கடந்த 18 மாதங்களாகத் தங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில், கைதடியில் மீளக்குடியமர்ந்த விவசாயிகள் அங்கு தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிய வந்துளளது. (உ-77)

## காரைநகர் மத்தியில்

# மூன்று அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பு

(ஊர்காவற்றுறை)

யு. என். எச். சி. ஆர். நிறுவனத்தின் நுண்கருத் திட்டத்தின்கீழ் காரைநகர் மத்தி ஜே/48 கிராம அலுவலர் பிரிவில் 14 இலட்சத்து 60 ஆயிரம்ரூபா செலவில் மூன்று அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன;

காரைநகர் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச்சங்க அங்கத்தவர்கள் 65 பேருக்கு 5 இலட்சம்ரூபா சுயதொழில் கடனாகவும, அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் 41 பேருக்கு 4 இலட்சத்து 10ஆயிரம்ரூபா சுயதொழில் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளதுடன்,

சாம்பலோடை கடற்கரையில் தொழிலாளர் தங்குமடம் 5 இலட்சத்து 50 ஆயிரம்ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. (உ-75)

## முதியோர் தின விழா

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில், முதியோர் தினவிழா, வரும் மாதம் 2ஆம் திகதி மு ப. 10 00 மணிக்கு ஊர்காவற்றுறை கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது; (உ-75)

# வடமராட்சி மீனவருடன் படைத் தரப்பு சந்திப்பு

(மந்திகை)

வடமராட்சி கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை தொடர்பான கூட்டமொன்று நேற்று நண்பகல் ஹாட்லிகல்லூரியில் 524 வதுபடைப்பிரிவின் இராணுவத்தளபதி தலைமையில் நடைபெற்றது.

ஏழு மீனவசங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில்; இன்பருட்டி கிழக்குவியாபாரிமூலை, தெனியம்மன் கோவிலடி, சுப்பர் மடம்கொட்டடிமுனை தும்பளை கிழக்குகற்கோளம் ஆகிய பகுதிகளில் உள்ள மீனவர்கள் காலை 5.30 மணிமுதல் 1.30 மணிவரையும் மாலை 3.00 மணி முதல் 5.30 மணிவரையும் கடற்பரப்பில் 500 மீற்றர் வரை மீன்பிடிக்க அனுமதி வழங்கபட்டுள்ளதாக படைதரப்பு தெரிவித்துள்ளது.

பாஸ்நடைமுறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்குமெனவும் படைதரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்பருட்டி மேற்கிலிருந்து தொண்டமனாறு வரையான பகுதிகளில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. [ந-423]

## பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. [உ-228]

## நம்பிக்கையில்லாப்...

பிரேரணையை ஆதரிக்கும் என்று அக்கட்சியின் எம்.பி சம்பக ஈரணவக்க தெரிவித்துள்ளார்.

இதுஇவ்வாறுஇருக்க இந்த நம்பிக்கைஇல்லாப் பிரேரணைக்கு அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ரெலோ ஆதரவளித்துள்ள போதும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை கூடியபின் இதுபற்றி தீர்மானிப்பது என்று கட்சியின் உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (வ)

## விளையாட்டு விழா

(மானிப்பாய்)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் விளையாட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3-30 மணிக்கு கட்டுடை விநாயகர் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு பிரதேசத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) கலந்து கொள்வார். [ந]

## இலங்கையர்...

தமக்கு அறிவித்ததாகவும் இத் தீவியத்தில் இலங்கையர் ஒருவர் காணமற் போயுள்ளதாகவும், ஆறுபேர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)


## வாழ்த்துகின்றோம்

54 வது அகவையைப் பூர்த்தி செய்து
இன்று 55 வது அகவையுள் பிரவேசிக்கும்
எமது அதிபர்
**திரு. க. இராசதுரை**
அவர்களை உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்

உதவி ஆளணியினர்
யாழ்/ மததிய கல்லூரி
(3595)


# இருபாலை அமுக்கவெடிச் சம்பவம்

# போரின்முடிவை வலியுறுத்துகிறது

## அனுதாபச் செய்தியில் ஈ.பி.டி.பி

அகாலமாக மனிதர்கள் உயிரிழக்கும் அவலம்தொடர்வது கவலைக்குரியது. வேதனைக்குரியது. அண்மையில் கட்டைப்பிராய் பகுதியில் அமுக்க வெடியொன்றுக்கு இலக்காகி எழுவர் உயிரிழந்துள்ளனர். அநியாயமான இத்தகைய உயிரிழப்புக்கள் தடுக்கப்படவும் தவிர்க்கப்படவும் வேண்டியவைஆகும்.

இவ்வாறு இருபாலையில் இடம் பெற்ற அமுக்கவெடியில் சிக்கிப் பலியானவர்களுக்கு அனுதாபம்தெரிவித்து ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைக்காரியாலயம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

இந்தஅமுக்கவெடியை யார் புதைத்தார்கள்? எந்த சக்தி இந்த அமுக்கவெடி புதைக்கப் படுவதற்கு பொறுப்பானது? என்பன போன்ற கேள்விகளை எழுப்பி ஒருதரப்புமீது மறுதரப்பு குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. மாறாக மண்ணுக்குள் மறைத்து வைத்து உயிர் பறிக்கும் சம்பவங்களில் இனி மேலும் ஈடுபடமுன்வருவதை தவிர்ப்பதும் ஏற்கனவே புதைக்கப் பட்டிருக்கும் இத்தகைய இயமன்களைத் தேடி அழிப்பதும் தான் தேவையானது. உயிர் இழப்புக்களின் சோகத்தை தடுக்க இதுவே வழியாகும்.

எனவே இந்தக் கோரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் சிந்தியுள்ள குருதி தொடரும் போர்ச் சூழல் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக இருக்கட்டும். போர்ச் சூழலிலும் மோதல் சம்பவங்களும் தொடரும் வரையில் அப்பாவி மக்கள் அநியாயமாக உயிரிழக்கும் அவலம் தொடரப் போகிறது என்பதை உணர்ந்து மாற்று வழிகாண பொறுப்பு வாய்ந்த ஒவ்வொருவரும் முன்வருவதே பெரிதும் வேண்டப்படுகிறது.

இருபாலையில்இடம்பெற்ற கோரச் சம்பவத்தில் அநியாயமாக உயிரிழந்தவர்களின் சோகத்தில் துவண்டு போயிருப்பவர்களுடன் எமது துயரங்களையும் பகிர்ந்து கொள்கின்றோம். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## அதிபரின் அகவை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை அவர்களின் 54வது அகவை விழா இன்று காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் ஆசிரியர் டபிள்யு. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை விழா அமைப்புக் குழு உறுப்பினர் ஞா. திருக்கேதீஸ்வரனும்ஆரம்ப உரையை ஒழுக்காற்றுக்கானஉதவி அதிபர் த. வரதராஜாவும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வரும் வண பிதாக்களும் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ் பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவர் க. தேவராஜாவும்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் ஆறு திருமுருகனும் ஆற்றுவர். (ந-5)

## சங்கர்

மென கேள்வியெழுப்பினார்.

இதேவேளை தாக்குதலை இராணுவத்தினரே மேற்கொண்டதாகவும் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளஅறிக்கையில் எச்சரித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## கேணல்

அஞ்சலிக்காக வட்டக்கட்சி, புதுக்குடியிருப்பு, விஸ்வமடு ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் நிகழ்ந்த சங்கரின் இறுதி நிகழ்விற்கு முள்ளியவளை பிரதேசப்பொறுப்பாளர் மூகுந்தன் தலைமை வகித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை, விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் வே. பாலகுமாரன் மகளிர் அணியைச் சேர்ந்த சாம்பவி ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

சங்கரின் மறைவை ஒட்டி வன்னிப் பிரதேசமெங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும், வாழை தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. [வ]

## க.பொ.த

களுக்கு தோற்றவேண்டியிருக்கும் எனவும் குழு ஒன்றில் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றவுள்ள மாணவர்களும், குழு இரண்டில் புதிதாகப் பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களும் அடங்குவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இரண்டாம் தடவையோ அல்லது அதற்கு மேலோ தோற்றும் மாணவர்களுக்கு 9ம், 10ம்,11ம் தரபாடத்திட்டங்களை அடிப்படையாக கொண்டும், புதிதாக தோற்றும் மாணவர்களுக்கு 10ம் 11ம் தரபாடத்திட்டங்களில் இருந்தும் வினாக்கள் தொகுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## யாழ்

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் கூற்றை மெய்ப்பிக்கும் அளவுக்குயுத்த மேகம் ஒன்று யாழ் குடாவின் தென்மராட்சிப் பகுதியைச் சூழ்ந்து வருவதாக இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இராணுவ ஆய்வாளர்களின் இக்கருத்தினை உறுதிப்படுத்துவதாக நேற்று முன்தினம் நாகர் கோவில் பகுதியில் இடம்பெற்ற புலிகளின் தாக்குதல் சம்பவமும் அமைந்துள்ளது. (வ)

## 5ம் தர

இதேவேளை 5ம்ஆண்டுபுலமைப் பரிசில்பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஏ.எம். ஆர். பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார். (வ-5)


# வாடிக்கையாளர்களுக்கு ஒரு செய்தி

எமது அன்பார்ந்த வாடிக்கையாளருக்கு தெரிவித்துக்கொள்வது:
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (30-09-2001) பிறீமா மா இறக்கும் பணி ஆரம்பமாவதால்
அதற்கு முன் எம்மிடம் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**வி. எஸ். பி. குறாப்**

275, 277 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2150 [கி/2644] FaX. 021 - 2140

★ உன்னத கலை நயம் மிக்க தங்க நகைகளுக்கு --

# நியூ ராதிகாஸ் நகை மாளிகை

189, கஸ்தூரியார் வீதி, (கி-2212) யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அச்சு ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.